## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 288/2013 | சாட்சி | பி.வா.சா.2 |
| பெயர் | தனபால் | நாள் | 03.12.2024 |
| தகப்பனார் பெயர் | மாதையன் | | |

**வாதிகள் தரப்பில் பி.வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

18) நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.12 ஆவணத்தில் எந்த இடத்திலும் என் பாட்டியின் பெயரோ அல்லது தாவா சொத்திற்குரிய சர்வே எண்ணே குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்றால், சரியல்ல. என் பாட்டி பெயர் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி சொத்திற்குரிய பட்டா எண்.304 என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பட்டா எண்.304 ல் மொத்தம் எத்தனை சர்வே எண்கள் உள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி பட்டா எண்.304 ல் வாதிகளின் மூதாதையர்கள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதால், அதில் கண்டுள்ள சொத்துக்கள் வாதிகளுக்குத்தான் பாத்தியப்பட்டது என்றால், சரியல்ல. 1955 ம் வருடத்திலிருந்து மேற்படி பட்டா எண்.304 சின்னம்மாள் பெயரில் தான் தாக்கலாகியுள்ளது.

19) தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.13 கந்தாய ரசீதுகளில் மாதையன் பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், என் பாட்டனார் பெயரோ என் பாட்டி பெயரோ குறிப்பிடப்படவில்லை என்றாலும், 1977 ம் வருடத்தில் என் பாட்டி மற்றும் பாட்டனார் இறந்துவிட்டதால், என் தந்தை பெயரில் குறிப்பிடப்பட்டிருக்கலாம். எங்களுக்கு பட்டா நிலத்தை தவிர புறம்போக்கு நிலம் எதாவது உள்ளதா என்றால், இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.13 கந்தாய ரசீதுகளில் நத்தம் என தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், முதலில் மேற்படி நிலம் பட்டா நிலமாக இருந்து, பின்னிட்டு நத்தம் நிலமாக மாற்றப்பட்டுள்ளது.

20) 1996ம் வருடத்திலேயே நத்தம் புறம்போக்கு நிலங்களை பொறுத்து கந்தாயம் வசூலிக்கப்படுவதில்லை என்ற நிலையில், நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.13 ல் கண்டுள்ள கந்தாய ரசீதுகள் வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்டவை என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.12, பி.வா.சா.ஆ.13 ஆகிய ஆவணங்கள் தாவா சொத்திற்கு தொடர்பற்றவை என்றால், சரியல்ல.

21) பி.வா.சா.ஆ.14 ஆவணத்தில் மாதையன், காளியப்பன் என இரண்டு பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி வரி ரசீது யார் பெயருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால், முதலில் காளியப்பன் பெயர் தவறாக குறிப்பிடப்பட்டு, பின் அது அடிக்கப்பட்டு, மாதையன் பெயர் எழுதப்பட்டுள்ளது. மேற்படி ரசீது மாதையன் பெயருக்கு வழங்கப்பட்டதாகும். மேற்படி ரசீது எந்த சர்வே எண்ணில் உள்ள வீட்டிற்கு வழக்கப்பட்டுள்ளது என்றால், ச.எண்.65/10C2 ல் உள்ள வீட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. எங்கள் வீடு ச.எண்.65/10C2 ல் உள்ளது என்பதற்கு வருவாய் ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால், ச.எண்.65/10C3 க்குரிய நத்தம் பட்டா உள்ளது.

22) ச.எண்.65/10 ல் உள்ள நிலம் முழுவதையும் எங்கள் குடும்பத்தினரே அனுபவித்து வருவதாக நான் கூறியுள்ள நிலையில், நான் சொல்வது போல் கிணறு பாகத்திற்காக மேற்படி சர்வே எண் பின்னிட்டு உட்பிரிவு செய்யப்பட்டிருந்தால் கூட, ஒரே ஒரு உட்பிரிவுதான் செய்யப்பட்டிருக்கும் என்றாலும், அரசாங்கத்தில் தவறாக வேலைவாய்ப்பு பெற வேண்டும் என்பதற்காக மேற்படி சர்வே எண்ணை பல்வேறு உட்பிரிவுகளாக நாங்கள் செய்துள்ளோம் என்றால், சரியல்ல.

23) அரசாங்கத்திலிருந்து மேற்படி ச.எண்.65/10 ல் உள்ள நிலத்தை நில கையகப்படுத்துதல் செய்தார்கள் என்றால், சரிதான். மேற்படி நில கையகப்படுத்துதல் தொடர்பான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால், இல்லை. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலங்களை என் தந்தையிடம் குதவை வைத்ததை தவறாக பயன்படுத்தி, அதை பல உட்பிரிவுகளாக செய்து, நாங்கள்

மோசடியாக வேலைவாய்ப்பை பெற்றுக்கொண்டோம் என்றால், சரியல்ல. மேற்படி வேலைவாய்ப்பு உண்மையில் வாதிகளுக்கு கிடைக்கவேண்டியது என்றாலும், நாங்கள் மோசடியாக ஆவணங்களை ஏற்படுத்தி என் சகோதரர் பெயரில் வேலை பெற்றுள்ளோம் என்றாலும், சரியல்ல.

24) தற்போது வரை ச.எண்.65/10ல் உள்ள 0.92 செண்ட் நிலமும் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், மேற்படி நிலங்களை பொறுத்து வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றாலும், தாவா சொத்திற்கு தொடர்பற்ற ஆவணங்களை நாங்கள் தாக்கல் செய்து, முன் வைக்கும் எதிர்வாதம் நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படவேண்டும் என்றாலும், சரியல்ல.

ஒம்/—திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.